**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, அரியலூர்**
**முன்னிலை: திருமதி. இரா. சங்கீதா சேகர், பி.ஏ.பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.I, அரியலூர்.**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் 28– ஆம் நாள் செவ்வாய் கிழமை**
**STC. No.312/2026**
**CNR No.TNAL040008502026**

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
அரியலூர் காவல்நிலையம்,
கு.எண்.496/2025. ... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

முனியமுத்து, 56/26
த/பெ.ஆதிமூலம்,
காலணி தெரு,
புதுப்பாளையம்,
அரியலூர் மாவட்டம். ... எதிரி.

**குற்றம்** : எதிரி மீது பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024.

**குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது** : எதிரி மீது பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024.

**தீர்ப்பு** : முடிவாக எதிரி மீதான பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024 –ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு இல்லை.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:00 +0530

| வ. எண் | குற்றம்சாட்டப்பட்டவர் பற்றிய விளக்கம் | | | | |
|---|---|---|---|---|---|
| | பெயர் | தந்தை/ கணவரின் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | முனியமுத்து | ஆதிமூலம் | கூலி | காலணி தெரு, புதுப்பாளையம், அரியலூர் மாவட்டம் | 56 |

| தேதி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| நிகழ்வு | புகார் | கைது (அ) சரணடை -ந்தது | ஜாமீன் விடுப்பு | சாட்சிகளின் விசாரணை செய்ய ஆரம்பித்த தேதி | சாட்சிகளின் விசாரணை செய்ய முடித்த தேதி | தண்டணை (அ) ஆணை | தாமதத்திற்கு விளக்கம் |
| 10.12.2025 | 10.12.2025 | 10.12.2025 | 10.12.2025 | 27.04.2026 | 27.04.2026 | 28.04.2026 | - |

| வரிசை எண். | விளக்கம் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் காவலில் வைக்கப்பட்ட காலம் | குற்றவாளி காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் |
| | | ---- | எதிரி 10.12.2025 அன்று காவல்நிலைய பிணையில் பிணையில் சென்றுள்ளார். |
| 2. | நீதிமன்றத்தில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்த தேதி. | 28.02.2026 | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கின் சமர்ப்பிக்கும் தேதி | இல்லை | |
| 4. | பாரதிய நகரிக் சுரக்க்ஷா சன்ஹிதா சட்டத்தின் பிரிவு 274 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரை விசாரிக்கும் தேதி | U/s. 274 of BNSS on 22.04.2026 | |

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:08 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | அனைத்து இதர மனுக்களையும் தாக்கல் செய்தல். BNSS இன் 355 போன்ற வழக்கமான மனுக்கள் தவிர, மேல் நீதிமன்றங்களில் உள்ள சவாலின் முடிவுகள் உட்பட அவற்றின் முடிவுகள் | இல்லை | | |
| 6. | முதல் விசாரணை மற்றும் சாட்சிகளின் குறுக்கு விசாரணை தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 27.04.2026 | 27.04.2026 |
| | | அ.சா.2 | 27.04.2026 | 27.04.2026 |
| | | அ.சா.3 | 27.04.2026 | 27.04.2026 |
| 7. | குற்றம் சாட்டப்பட்ட U/s இன் பரிசோதனை தேதி. 351(1)(b) BNSS | 28.04.2026 | | |
| 8. | இந்த தோற்றம் / தயாரிப்பில் தலைமறைவு விவரங்கள், சந்தர்ப்பம் இருக்கலாம். | ஜாமீனில் வெளிவர முடியாத வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது | | ரத்து செய்யப்பட்ட தேதி |
| | | – | | – |
| 9. | அவர்களின் முடிவுகளுக்கு மேல் நீதிமன்றங்களால் பெறும் தடை | இல்லை | | |

இவ்வழக்கானது 07.03.2026 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 28.04.2026–ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில், அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர், நிலை 2, அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பரமசிவம்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கானது பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 193–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை கீழ் தாக்கல் செய்த வழக்காகும்.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:16 +0530

2. <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>

அரியலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.சிவராஜ் என்பவர் நிலைய காவலர் 984 திரு.உத்தமசெல்வன் மற்றும் காவலர் 1332 திரு.பழனிவேல் ஆகியோருடன் கடந்த 10.12.2025 ந் தேதி மதியம் 13.15 மணியளவில் புதுபாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்த போது எதிரி முனியமுத்து என்பவர் சுமார் 180 ML அளவுள்ள MEN CLUB BRANDY 27 மதுபாட்டில்களை எவ்வித அரசு அனுமதியும் இன்றி கள்ளத்தனமாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024 –ன் படி தண்டிக்கத்தக்கது என்று அரியலூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி குற்ற இறுதியறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால், இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி முன்னிலையான பிறகு 09.04.2026–ஆம் தேதி அவருக்கு வழக்காவணங்களின் நகல் பா.ந.சு.ச.பிரிவு. 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்பு, 22.04.2026 ஆம் தேதி பா.ந.சு.ச. பிரிவு 274(1)–ன் படி எதிரி மீது பிரிவு 4(1) (C) TNP Act 2024–ன் கீழ் எதிரிக்கு குற்றச்சாட்டுகளின் சாராம்சங்கள் குறித்து விளக்கி கேள்வி கேட்டபோது, எதிரி தான் குற்றவாளி இல்லை என குற்றத்தை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே, வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேலும், எதிரி தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம்</u>

இவ்வழக்கின் அ.சா.1, அ.சா.2 அரசு தரப்பு சாட்சிகள் சம்பவம் குறித்து உதவி ஆய்வாளருடன் ரோந்து அலுவலாக சம்பவ இடம் சென்று கண்காணித்த போது, எதிரியிடமிருந்து பீர்பாட்டில்களை கைப்பற்றியது பற்றியும், கைப்பற்றுதல் மகசரில்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:23 +0530

கையொப்பம் செய்தது பற்றியும், எதிரி மீது வழக்கு பதிவு செய்து, பாட்டில்களில் இருந்த மதுவை உதவி ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் அழிப்பு மகசர் மூலம் அழித்துவிட்டது பற்றியும் அழிப்பு மகசரில் கையொப்பம் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 மூலம் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2 மூலம் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும், அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.3 சிவராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர், எதிரியிடமிருந்த பீர்பாட்டில்களை கைப்பற்றியது பற்றியும், பாட்டில்களில் உள்ள மதுவை அழிப்பு மகசர் மூலம் அழித்தது பற்றியும், வழக்கு பதிவு செய்தது பற்றியும், அ.சா.1,2 ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், அ.சா.3 மூலமாக கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், அழிப்பு மகசர் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டபின் 28.04.2026–ஆம் தேதி எதிரிக்கு பாதகமாக தோன்றும் அரசு தரப்பு சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து எதிரிக்கு எடுத்துக்கூறி பா.ந.சு.ச. பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்று தெரிவித்தார். பின்னிட்டு சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இருதரப்பு சாட்சிகள், விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

7. <u>அரசு தரப்பு வழக்கறிஞர் வாதுரை</u>

அரசு தரப்பில், அரியலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.சிவராஜ் என்பவர் நிலைய காவலர் 984 திரு.உத்தமசெல்வன் மற்றும் காவலர் 1332 திரு.பழனிவேல் ஆகியோருடன் கடந்த 10.12.2025 ந் தேதி மதியம் 13.15 மணியளவில் புதுபாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்த போது எதிரி முனியமுத்து என்பவர் சுமார் 180 ML அளவுள்ள MEN CLUB BRANDY 27 மதுபாட்டில்களை எவ்வித

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:31 +0530

அரசு அனுமதியும் இன்றி கள்ளத்தனமாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்துள்ளார். அதை அ.சா.1 முதல் அ.சா.3 வரை உள்ள சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிரி தண்டிக்கப்படவேண்டும் என்று அரசு தரப்பு வழக்கறிஞரால் வாதிடப்பட்டது.

8. <u>எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதுரை:–</u>

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. 10.12.2025 அன்று சம்பவம் நடைபெற்று 72 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 10.12.2025 அன்று மதியம் 13.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மூலம் வழக்கு சொத்தை கைப்பற்றினேன் என்றால் சரிதான் என்றும், முதல் தகவலறிக்கையில் காலம் 3 பி –ன் படி வழக்கு பதிவு செய்த நேரம் 14 மணி என்றால் சரிதான் என்றும், அ.சா.3 தன்னுடைய குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார் இந்நிலையில், வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு தயார் செய்ததாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசரில் வழக்கின் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கைப்பற்றுதல் மகசர் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்த போது தனி நபர்கள், பொதுமக்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். எதிரி மது பாட்டில்களை விற்பனை செய்ததாக கூறி பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றும், தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றாமல் போலீசாரை சாட்சிகளாக சேர்த்து கைப்பற்றியதாக பொய்யாக புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பவ இடத்தில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், போலீஸ் அதிகாரிகளை தவிர பொது மக்கள் யாரையும் கண்ணுற்ற சாட்சிகளாகவோ, மகசர் சாட்சிகளாகவோ விசாரிக்கவில்லை. தனிப்பட்ட நபர்கள் யாரும் இது சம்மந்தமாக புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே,

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:39 +0530

சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

**தீர்வு**

09. இவ்வழக்கில், அரியலூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.சிவராஜ் என்பவர் நிலைய காவலர் 984 திரு.உத்தமசெல்வன் மற்றும் காவலர் 1332 திரு.பழனிவேல் ஆகியோருடன் கடந்த 10.12.2025 ந் தேதி மதியம் 13.15 மணியளவில் புதுபாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்த போது எதிரி முனியமுத்து என்பவர் சுமார் 180 ML அளவுள்ள MEN CLUB BRANDY 27 மதுபாட்டில்களை எவ்வித அரசு அனுமதியும் இன்றி கள்ளத்தனமாக விற்பனை செய்வதற்காக வைத்திருந்துள்ளார். மேற்படி, எதிரி மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

10. இந்த வழக்கில் அ.சா.1 உத்தமசெல்வன் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 10.12.2025 அன்று அரியலூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் சிவராஜ், நான், காவலர் 1332 பழனிவேல் ஆகிய மூவரும் 13.12 மணிக்கு புதுப்பாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நின்றிருந்த ஒரு நபர் எங்களை பார்த்தவுடன் ஓட முயன்றவர்களை வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் மற்றும் முகவரி முனியமுத்து த/பெ. ஆதிமூலம், புதுப்பாளையம் என்று கூறினார் என்றும், அவர்கள் வைத்திருந்த சாக்கு பையை சிறப்பு உதவி ஆய்வாளர் திறந்து பார்த்தபோது 180 ML Men club –27, இருந்தன என்றும், அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அந்த பாட்டில்களை கைப்பற்றினார் என்றும், என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து அரியலூர் காவல் நிலைய

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:47 +0530

குற்ற எண்.496/2025 என்ற வழக்கை சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அவருக்கு நானும் பழனிவேல் ஆகிய இருந்தோம் என்றும், அந்த பாட்டில்களில் இருந்த மதுவை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அழிப்பு மகசர் மூலம் அழித்துவிட்டார் என்றும், என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அந்த முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் அசைவு பதிவேடு தயார் செய்தாரா என்றால் தயார் செய்தார். சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபிறகு காவல்நிலையம் சென்று சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.2 பழனிவேல் தனது நீதிமன்ற முதல் விசாரணையில் 10.12.2025 அன்று அரியலூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் சிவராஜ், நான், முதல்நிலை காவலர் 984 உத்தமசெல்வன் ஆகிய மூவரும் 13.12 மணிக்கு புதுப்பாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நின்றிருந்த ஒரு நபர் எங்களை பார்த்தவுடன் ஓட முயன்றவர்களை வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் மற்றும் முகவரி முனியமுத்து த/பெ. ஆதிமூலம், புதுப்பாளையம் என்று கூறினார் என்றும், அவர்கள் வைத்திருந்த சாக்கு பையை சிறப்பு உதவி ஆய்வாளர் திறந்து பார்த்தபோது 180 ML Men club –27, இருந்தன. அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அந்த பாட்டில்களை கைப்பற்றினார் என்றும், என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து அரியலூர் காவல் நிலைய குற்ற எண்.496/2025 என்ற வழக்கை சிறப்பு உதவி ஆய்வாளர் பதிவு செய்தார்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:58:54 +0530

என்றும், அவருக்கு நானும் உத்தமசெல்வன் ஆகிய இருந்தோம் என்றும், அந்த பாட்டில்களில் இருந்த மதுவை உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் அழிப்பு மகசர் மூலம் அழித்துவிட்டார் என்றும், என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் என்றும், அந்த முதலாவது கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.2 தனது குறுக்குவிசாரணையில், நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் அசைவு பதிவேடு தயார் செய்தாரா என்றால் தயார் செய்தார். சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்து கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபிறகு காவல்நிலையம் சென்று சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் என்றால் சரிதான் என்றும், ரோந்து பணி தொடங்கி ஆஜர் எதிரியை கைது செய்து அவரிடம் வழக்கு சொத்தை கைப்பற்றி காவல்நிலையம் அழைத்து சென்று வழக்கு பதிவு செய்து, காவல்நிலையத்தை சேர்ந்த 1,2 சாட்சிகள் விசாரித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது அனைத்தும் சிறப்பு உதவி ஆய்வாளர் சிவராஜ் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.3 சிவராஜ் தனது நீதிமன்ற முதல் விசாரணையில், 10.12.2025 அன்று அரியலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நான், முதல் நிலை காவலர் 984 உத்தமசெல்வன், காவலர் 1332 பழனிவேல் ஆகிய மூவரும் 13.12 மணிக்கு புதுப்பாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நின்றிருந்த ஒரு நபர் எங்களை பார்த்தவுடன் ஓட முயன்றவர்களை வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் மற்றும் முகவரி முனியமுத்து த/பெ. ஆதிமூலம், புதுப்பாளையம் என்று கூறினார். அவர்கள் வைத்திருந்த சாக்கு பையை நான் திறந்து பார்த்தபோது 180 ML Men club –27, இருந்தன. அங்கு பொது மக்கள் யாரும் இல்லாததால் காவலர்கள் முன்னிலையில் நான் உதவி ஆய்வாளர் அந்த பாட்டில்களை மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், எதிரியை கைது செய்து எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து அரியலூர்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:59:02 +0530

காவல் நிலைய குற்ற எண்.496/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(C) TNP Amendment Act–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் என்றும், அந்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், எதிரியை காவல் நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், அந்த பாட்டில்களில் இருந்த மதுவை நான் காவலர்கள் முன்னிலையில் அழிப்பு மகசர் மூலம் அழித்துவிட்டேன் என்றும், அந்த அழிப்பு மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், காவலர்கள் உத்தமசெல்வன், பழனிவேல் ஆகியோலை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. அ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் இந்த வழக்கில் சம்பவ இடம் என்பது புதுப்பாளையம் கிராமம் என்றால் சரிதான். 10.12.2025 அன்று மதியம் 13.45 மணிக்கு கைப்பற்றுதல் மகசர் மூலம் வழக்கு சொத்தை கைப்பற்றினேன் என்றால் சரிதான் என்றும், முதல் தகவலறிக்கையில் காலம் 3 பி –ன் படி வழக்கு பதிவு செய்த நேரம் 14 மணி என்றால் சரிதான் என்றும், ஆனால் முதல் தகவலறிக்கையை நீதிமன்றத்திற்கு 02.03.2026 அன்று 72 நாட்கள் கழித்து அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், அ.சா.1, அ.சா.2 ஆகியோர்தான் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசரில் சாட்சிகள் என்றால் சரிதான் என்றும், கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண். 496/2025 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்தபோது தனி நபர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் பொது மக்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்றும், இந்த வழக்கில் கைப்பற்றுதல் முதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்தது வரை நான்தான் செய்தேன் என்றால் சரிதான் என்றும், ஒரு முறையான புலன்விசாரணை இருந்தால் மட்டுமே நேர்மையான வழக்குகளை நீதிமன்றத்தில் நடத்த முடியும் ஒரு வேலை மேலே சொன்ன படி நடந்திருந்தால் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்று உச்ச நீதிமன்ற வழிகாட்டியுள்ளது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.3, தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில், சம்பவ தினத்தன்று நிலைய காவலர்களுடன் புதுபாளையம் எதிரி வீட்டு அருகே சென்று கண்காணித்த போது அங்கே ஒரு வெள்ளை நிற சாக்குபையுடன்

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:59:12 +0530

நின்றுகொண்டிருந்த ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயற்சித்தார் என்றும், அந்த நபரை பிடித்து சாக்கு பையை பிரித்து பார்க்க அதில் 180ML அளவுள்ள MEN CLUB BRANDY அரசு மதுபாட்டில்கள் – 27 இருந்தது என்றும், அவரை விசாரித்த போது மதுபாட்டில்களை அரசு அனுமதியின்றி கள்ளதனமாக விற்பனை செய்வதற்கு வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டார் என்றும், எனவே எதிரியை மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி காரணம் கூறி கைது செய்ததாகவும், சம்பவ இடத்தில் இருந்த மதுபாட்டில்களை மகஜரில் கைப்பற்ற பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக முன்வராத காரணத்தால் போலீசார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும் எதிரி மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து எதிரியை திரேக சோதனை செய்து நிலைய பாரா வசம் ஒப்புவித்து, எதிரி மீது வழக்கு பதிவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை.

17. இவ்வழக்கில் அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் திரு.சிவராஜ் என்பவர் புகார்தாரர் ஆவார். அ.சா.1, அ.சா.2 ஆகிய நிலைய காவலர்களும் நீதிமன்ற முதல் விசாரணையில் அ.சா.3 காவல் உதவி ஆய்வாளரின் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 தங்களது தனது குறுக்குவிசாரணையில் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் அசைவு பதிவேடு தயார் செய்தாரா என்றால் தயார் செய்தார் என்றும் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள். காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3 தனது குறுக்குவிசாரணையில் முதல் தகவலறிக்கையை நீதிமன்றத்திற்கு 02.03.2026 அன்று 72 நாட்கள் கழித்து அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்தபோது தனி நபர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் பொது மக்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்றும், 15 கி.மீ. தொலைவில் ரோந்து பணி செய்வதற்கு அசைவு பதிவேடு தயார் செய்துள்ளேனா என்றால் இல்லை என்றும், ஒரு முறையான புலன்விசாரணை இருந்தால் மட்டுமே நேர்மையான வழக்குகளை நீதிமன்றத்தில் நடத்த முடியும் ஒரு வேலை மேலே

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:59:19 +0530

சொன்ன படி நடந்திருந்தால் எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்று உச்ச நீதிமன்ற வழிகாட்டியுள்ளது என்றால் சரிதான் சாட்சியம் அளித்துள்ளார்.

18. புகார்தாரர் அ.சா.3 தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் எதிரி மதுபாட்டில்களை அரசு அனுமதியின்றி கள்ளத்தனமாக விற்பனை செய்வதற்கு வைத்திருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அவ்வாறு எதிரி மதுபாட்டில்களை கள்ளத்தனமாக விற்பனை செய்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு தயார் செய்ததாக சொல்லப்படும் கைப்பற்றுதல் மகசரில் வழக்கின் குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கைப்பற்றுதல் மகசர் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அதேபோல் நிலைய காவலர்களான அ.சா.1, அ.சா.2 ஆகியோரும் எதிரி மதுபாட்டில்களை கள்ளத்தனமாக விற்பனை செய்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் பொதுமக்கள் யாரும் எதிரி மதுபாட்டில்களை கள்ளத்தனமாக விற்பனை செய்ததாக புகார் அளிக்கவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் தனிநபர் சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்படவில்லை. கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்று அ.சா.3 தன்னுடைய குறுக்குவிசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் யாரிடமிருந்து அரசு மதுபான பாட்டில்களை கைப்பற்றினார் என்று அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படாத நிலையில், எதிரி அரசு மதுபாட்டில்களை கள்ளத்தனமாக விற்பனை செய்தார் என்பதையும் அரசு தரப்பால் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் வாயிலாக அறிய முடியவில்லை. சம்பவ இடத்தில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகள் எதனையும் ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. முரண்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் அடிப்படையில் எதிரி மீதான குற்றத்தை எதிரிக்கு எதிராக அனுமானம் செய்வது என்பது ஏற்புடையதாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது. அரசு தரப்பானது எதிரி மீதான குற்றச்சாட்டுகளை

R SANGEETHA SEKAR
Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:59:28 +0530

தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என முடிவு செய்யப்படுகிறது.

19. மேலும், எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சிகள் குறித்து எழுப்பிய சந்தேகங்களுக்கு அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேற்கூறிய அனைத்து சங்கதிகளினாலும், விவாதத்தின் மூலமும் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் எழுகிறது. எனவே, அரசு தரப்பின் எதிரி மீது வனையப்பட்ட பிரிவுகள் 4(1) (C) TNP (Amendment) Act 2024 –ன் படியான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. அரசு தரப்பு சாட்சிகள் வழியாக உறுதிபடுத்தப்படவில்லை என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிக்கு இவ்வழக்கில் சந்தேகத்தின் பலனை அளிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின்பால் உகந்தது என்று கருதி சந்தேகங்களின் பலன் எதிரிக்கு அளிக்கப்படுகிறது.

21. முடிவாக எதிரி மீதான பிரிவு 4(1) (C) TNP (Amendment) Act 2024 –ன் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து பிரிவு 278(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி எழுதி கொடுத்த பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகவேண்டியுள்ளது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே வழக்குச் சொத்து பற்றிய உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர், 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28–ம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:59:35 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :-**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.உத்தமசெல்வன், தலைமைக் காவலர் |
| 2. | அ.சா.2 | திரு.பழனிவேல், இரண்டாம்நிலை காவலர் |
| 3. | அ.சா.3 | திரு.சிவராஜ், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| 1. | அ.த.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.1 ன் முதலாவது கையொப்பம் |
| 2. | அ.த.சா.ஆ.2 | அழிப்பு மகசரில் உள்ள அ.சா.1 ன் முதலாவது கையொப்பம் |
| 3. | அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.2 ன் இரண்டாவது கையொப்பம் |
| 4. | அ.த.சா.ஆ.4 | அழிப்பு மகசரில் உள்ள அ.சா.2 ன் இரண்டாவது கையொப்பம் |
| 5. | அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசர் |
| 6. | அ.த.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை |
| 7. | அ.த.சா.ஆ.7 | அழிப்பு மகசர் |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u>:-** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>**:- இல்லை.

**<u>பின்குறிப்பு</u>** :-

1. இவ்வழக்கின் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரி விசாரணையின் போது சிறையில் இல்லை.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

R SANGEETHA SEKAR

Digitally signed by R SANGEETHA SEKAR
Date: 2026.04.28 17:59:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.I,
அரியலூர்.